பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
"ராஜ்கோபால்ஸ்"
(பட்டுச் சேலைகளின் காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை
ரூ 2. 50

ஜவுளி வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி!
"பூகோட"
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
"ராஜ்கோபால்ஸ்"
பூகொட மொத்த,
சில்லறைவிற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கூர்: 4 ஸிபவ ஞு தை மீ 05 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 09 (18-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 47

யாழ்தேவி வாரத்தில் 2 தினங்கள் மட்டுமே

யாழ்ப்பாணம், ஜன 18

யாழ்ப்பாண மக்கள் கொழும்பு யாழ்தேவி ரயில்சேவை வாரத்தில் இரண்டு தினங்கள் மட்டுமே நடைபெறும் என ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி வெள்ளிக்கிழமை காலை 5.45 மணிக்கு சோட்டையில் இருந்து புறப்படும் ரயில் பிற்பகல் 2.45 மணியளவில் யாழ் ரயில் நிலையத்தை வந்தடையும்.

இந்த ரயில் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு மாலை 6.30 மணியளவில் கோட்டையைச் சென்றடையும்.

இதேபோல் சனிக்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவுப் பகுதி நேற்று படையினரால் முற்றுகை

படகுச் சேவையும் நடக்கவில்லை

நெடுந்தீவுப் பகுதியை நேற்று இந்திய அமைதிப் படையினர் முற்றுகையிட்டனர்.

விழுமையான தேடுதலுக்கு ஹெலிக்கொப்டர்களில் வந்திறங்குவது போலல்லாது மீன்பிடி இழுவைப் படகுகளிலேயே இவர்கள் வந்திறங்கினர்.

இப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது

இதனால் வழமையான நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவையும் நேற்று இடம்பெறவில்லை. (ஒ-11)

திளிநொச்சியில் வங்கிகள் முடிக் கிடக்கின்றன

கிளிநொச்சியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் கிளைகள் கடந்த வியாழக்கிழமை முதல் மூடப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்த வங்கிகள் வாரத்தில் மூன்று நாட்கள் இயங்கி வந்தன.

பின்னர் வாரத்தில் ஐந்து வேலை நாட்களும் வங்கிகள் இயங்கின.

இதன் பின்னர் விடுக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றை அடுத்தே வங்கிகள் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது [ஒ-10]

மார்ச் முதல் வாரம் அளவில்

இந்திய அமைதிப்படையின் மற்றொரு பிரிவும் வாபஸ்!

கொழும்பு, ஜன 18

எதிர்வரும் மார்ச் முதல் வாரம் அளவில் இந்திய அமைதிப் படையின் இன்னொரு பிரிவு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து விலக்கிக்கொள்ளப்படும் என்று தெரிய வருகிறது.

இதனைத் தெரிவிக்கும் செய்தி ஒன்றை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இந்தியத் தூதர் டிக்ஸிற் மூலம் அனுப்பி வைத்திருக்கிறார் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப் பிரதமரின் செய்தியை திரு டிக்ஸிற் நேற்று முன்தினம் ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் கையளிக்கவிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

இன்று புதுக்கடைத்
✯ திறப்பு விழா ✯
1989 - 01 - 18
புதன்கிழமை

ஸ்ரீ கருமாரி
ஜுவல்லர்ஸ்
173C, கஸ்தூரியார் வீதி.
தேவி பிளாசா பில்டிங்
[உள்ளே]
[வின்ஸர் தியேட்டர் முன்பாக]
★ எமது சிவன் கோவில் வடக்கு வீதியில் இயங்கிய ஸ்ரீ கருமாரி ஜுவல்லர் மேற்படி விலாசத்துக்கு மாற்றப்பட்டுள்ளது ★
எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்
— ஸ்தாபனத்தார்.
[9176]

பாதுகாப்பற்ற கடவையில்

ரயில் - பஸ் விபத்து!

52 பயணிகள் பலி!!

உயிரிழந்தோரில் அனேகர் மாணவர்

முச்சந்தி முரளி

கொழும்பு, ஜனவரி 18

தென்னிலங்கையில் அஹுங்கல என்ற இடத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று பாதுகாப்பற்ற கடவையில் ரயில் எக்ஸ்பிரஸ் ஒன்றுடன்மோதுண்டு விபத்துக்குள்ளாகியது.

இதில் 52 பேர் உயிரிழந்தனர். நூற்றுப்பத்திற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

கொழும்புக்குத் தெற்கே 75 கிலோமீட்டர் தொலைவில் — கரையோரப் பகுதியான கொஸ்கொடவுக்கு அருகில் — நேற்று நண்பகல் 2. 30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

அஹுங்கல என்னுமிடத்தில் இருந்து உருங்கஹ என்னுமிடத்துக்குச் சென்று கொண்டிருந்த பஸ் பாதுகாப்பற்ற ரயில் கடவை ஒன்றைக் கடக்க எத்தனித்தபோது ரயிலுடன் மோதியது.

காயமடைந்தவர்கள் காலி, அம்பலாங்கொட, பலப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து நடந்த இடத்தில் மாணவர்களின் புத்தகங்களும், கைகளும் (6 ஆம் பக்கம் பார்க்க)

ஒரே மரணச் செய்தியாய் இருக்குது பாருங்கோ...!

மொறட்டுவையில் இரு வங்கிகளில் ஒரே நேரத்தில் ரூ. 50 லட்சம் கொள்ளை

கொழும்பு, ஜன 18

மொறட்டுவ கட்டுப்பெத்த இலங்கை வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கிக் கிளையிலும் நேற்றுக் காலை சுமார் 11.45 மணியளவில் மொத்தம் ஐம்பது லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

இலங்கை வங்கிக் கிளையில் முப்பது லட்சம் ரூபாவும், மக்கள் வங்கிக் கிளையில் இருபது லட்சம் ரூபாவும் கொள்ளையிடப்பட்டது.

ஆயுதந் தரித்த ஏழு பேர் கொண்ட கொள்ளை ஒன்றே இந்தக் துணிகரக் கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

கடத்தப்பட்ட வான் ஒன்றில் வந்ததாகக் கூறப்படும் இந்தக் கொள்ளையர்கள் இரண்டு வங்கிகளுக்குள்ளும் புகுந்து ஆயுதமுனையில் அங்கிருந்த ஊழியர்களை மிரட்டி அங்கிருந்த பணம் முழுவதையும் கருட்டிக் கொண்டு சென்று விட்டனர்.

கொள்ளை நடைபெற்ற சிறிது நேரத்துக்குள் பொலீஸாரும் ஆயுதப் படையினரும் அப்பகுதிக்கு விரைந்து வந்தனர்

கொள்ளையர் தப்பிச் செல்லாது இருக்கும் பொருட்டு அந்தப்பகுதி போக்குவரத்து அனைத்தும் தடுக்கப்பட்டது.

பின்னர் இராணுவம் நடத்திய சுற்றி-வளைப்புத் தேடுதலின்போது, கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒரு நபர் கட்டுக்கொலைப்பட்டார். என்றும்-

வங்கிக்குள் கிடந்த (6 ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலை நகரில் குண்டுவெடிப்பு:4 பேர் பலி

கொழும்பு, ஜன 18

திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர்;பதினேழு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். பொலீஸார் விசாரணை நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. (உ-எ)

வடக்கில் அடகு நகைகள் மீண்டும் அடுத்த வாரம் முதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன 18

வடபகுதி மக்களின் அடகு நகைகள் மீண்டும் அடுத்த வாரம் முதல் மக்கள் வங்கியினால் வழங்கப்படும்.

ஏற்கனவே பணம் செலுத்திய வர்களின் நகைகள் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணம் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். பிரதான வீதி, கன்னுதிட்டி, புங்குடுதீவு, சங்கானை ஆகிய மக்கள் வங்கிக்கிளைகளில் அடகு வைத்த ஆயிரம் பேர்களது நகைகள் அடுத்த வாரம் வழங்கப்படும்.

புங்குடுதீவுக் கிளையில் அடகு வைத்தவர்கள் யாழ் பிரதான வீதி மக்கள் வங்கியிலும்.

சங்கானைக் கிளையில் அடகு வைத்தவர்கள் யாழ். கன்னுதிட்டி மக்கள் வங்கிக் கிளையிலும் நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை அடகு நகைகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் அவற்றை விநியோகிப்பதற்கான திகதிகள் உடனடியாக அறிவிக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஈரானில் ஒரேநாளில் 56 பேருக்குத் தூக்கு!

தெஹ்ரான், ஜன 18

போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்டதற்காக ஒரு நாளில் 56 பேரை ஈரான் அரசு நேற்றுமுன்தினம் தூக்கிலிட்டது.

இவ்வளவு பேரை ஈரான் அரசு தூக்கில் போட்டது இதுவே முதல் தடவை என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

சுபநேரம்

18 -1 - 1989
தை - 05
புதன்கிழமை
சுபநேரம்:
5.05 முதல் 6.35 வரை
ராகுகாலம்:
12.35 முதல் 2.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

வவுனியாவில் மோதல்; 15 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன 18

வவுனியாவில் இன மோதல்கள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை அடுத்து ஏற்பட்ட சம்பவங்களில் 15 பேர் வரை உயிரிழந்தனர்.

வவுனியா மாமடுவையில் ஒளித்திருந்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இலங்கை இராணுவத்தினரும் குடிமகன் ஒருவரும் உயிரிழந்தனர்.

அதன்பின்னர் நடந்த இன மோதலில் மேலும் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்,

அதன்பின்னர் அமைதிப் படையினர் அப்பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கையின் போது 2 தீவிரவாதிகள் உயிர் இழந்தனர். (உ-ஒ-எ)

2 ஜவான்கள் மரணம்

புதுடில்லி, ஜன 18

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் இரு ஜவான்கள் கொல்லப்பட்டதாக தூரதர்ஷன் நேற்றிரவு அறிவித்தது.

அம்பாந்தோட்டையில் 3 சிப்பாய்கள் பலி!

அம்பாந்தோட்டையில் நேற்று மீண்டும் மூன்று இலங்கை இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இனந்தெரியாத நபர்கள் மறைந்திருந்து தாக்கியதில் இவர்கள் கொல்லப்பட்டனர்.

ஜே. வி. பி. தீவிரவாதிஒருவரும்அப் பாதுகொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட சில மணித்தியலங்களிலும் அம்பாந்தோட்டையில் 3 இலங்கை இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

கிரனேட் வீச்சு: மூதாட்டி பலி!

கொழும்பில் கார் ஒன்றின் மீது கிரனேட் வீசப்பட்டதில் மூதாட்டி ஒருவர் மரணமடைந்தார்; 4 பேர் காயம் அடைந்தனர்.

தாக்குதல் நடந்த சமயம் காரில் பயணஞ் செய்த அரச தரப்பு அரசியல்வாதி காயங்கள் இன்றி தப்பிவிட்டார் என்று பி பி சி, அறிவித்தது. (ஒ-எ)

கிழக்கில் வெள்ளம்

கடந்த மூன்று நாட்களாக கிழக்கில் பெய்த கடும்மழை காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை மற்றும் சில பகுதிகளில் வெள்ளநிலை ஏற்பட்டிருக்கிறது

இப்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக ஐந்து உதவி நிலையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன

பாதிக்கப்பட்டோரை அங்கிருந்து அகற்றும் பணியும் ஆரம்பமாகி உள்ளது. (உ-ஒ)

ஜே. வி. பியிடம் மன்னிப்பு கோரி ஊர்வலம்

கொழும்பு, ஜன 18

"வாக்களித்ததற்காக ஜே. வி. பி. யிடமிருந்து மன்னிப்புக் கோருகிறோம்" இப்படி எழுதப்பட்ட கலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் சுமார் ஆயிரம் பேர் சனிக்கிழமை நள்ளிரவு வாக்கில் அனுராதபுரத்தில் அபேயபுர என்னும் இடத்தில் ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்தனர்.

அனுராதபுரம் நகரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மங்களகரமான திறப்பு விழா
✯ சோபனா ஜுவல்லறி
18 - 1 - 1989 புதன்கிழமை
காலை 8.20 மணி தொடக்கம் 9.30 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஆரம்பிக்கவுள்ளோம்.
கன்னியர் உலகம்
காணத் துடிக்கும் நகைகளை
கிரட் இருபத்திரண்டில்
கவர்ச்சியாகச் செய்துகொள்ள
இன்று முதல்
சோபனா ஜுவல்லறி
116 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[9005]
விளம்பர அமைப்பு:- ஷண் அட்வடைடிங் சேவிஸஸ்

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி Icing set. English Pram செற்றி Show Case, கண்ணாடி மேசை, அலுமாரி, கட்டில், Fan கபேட் மேசை, Tray-Cycle, English Cutlery Set மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 343: பருத்தித்துறை வீதி, நல்லூர். (8998)

சமூகக்கல்வி நூல்கள்/ பயிற்சிகள்

சமூகக்கல்வி ஆண்டு 6, 7, 8, 9, 10, 11ஆம் வகுப்புகளுக்குரிய நூல்களும், பயிற்சிகளும் தனித்தனியே வெளிவந்துவிட்டன. ஆக்கியோன்; க. குணராசா, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (8960)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப்குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [C/1341)

கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா லோமன் வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் 'Golden Commet'' சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்புச் சேவல் குஞ்சுகள் வளர்த்திருக்குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் கோழிகள், கோழித்தீன் கோழிகளுக்கான மருந்து வகைகள் ஆலோசனைகள் ஆகியன வற்றிற்கு தொடர்பு: கொள்ளுங்கள்: பரம் ஏஜன்சி கிளிநொச்சி (8890)

Nallur Farm Centre, Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden Comet, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1340)

கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) இன பிறவுன் பேட்டுக் குஞ்சு பிறவுன் சேவல் குஞ்சு, கறுப்பு (பிலிமத்) புன்னி சேவல் (Cobb) இன புறொயிலர் குஞ்சு (28-1-89) சனிக்கிழமை விநியோகிக்கப்படும். சொண்டு வெட்டப்பட்டது (மறெக்ஸ்) தடுப்பூசி போடப்பட்டது. முன்கூட்டியே பதிவு செய்க. இல 9, கற்தையா லேன், (குரா வத்தை றோட்டு) சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [8877]

புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (8755)

ஏலவிற்பனை

கட்டடங்கள், திணைக்களம், யாழ்ப்பாணம் வடக்கு கொக்குவில் பிறவுன் வீதியில் அமைந்திருக்கும் மேற்படி ஆலுவலகத்தில் பாவித்த கட்டடப் பொருட்கள் 1-02-1989 புதன் காலை 10-00 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும். பணத்தைச் செலுத்தி உடன் பொருட்கள் அகற்றப்பட வேண்டும். மாவட்டப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் வடக்கு (8898)

NEW CITY TRADERS

சகல விதமான சுவர் மணிக்கூடுகள், லக்கேஜ் மணிக்கூடுகள், மேசை மணிக்கூடுகள், Film Roll வகைகள், சூட்கேஸ், Travelling Bags, School Bags, Wheel Bags, எவர்சில்வர் பொருட்கள், Glass மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் மலிவாகப் பெற்றுக்கொள்ள New City Traders. 135 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/1350)

தேவை

இருல் பதவிடும் தொழிற்சாலைக்கு பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். சல்கி இம்பெக்ஸ், றிறைவேட் லிமிட்டெட் 41, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். (8897)

ஸ்ரூடியோ வேலை தெரிந்த அல்லது வேலை பழக விரும்பும் ஒருவர் உடன் தேவை. வின் சன்ஸ் ஸ்ரூடியோ சுன்னாகம். (8989)

பல் வைத்திய தாதிப் பயிற்சி பெற விரும்பும் 25 வயதிற்குட்பட்ட பெண்கள் 21ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். Dr நிதியானந்தன், 163/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (8896)

ஆண் பெண் விற்பனையாளர்களும், விநியோகஸ்தரும், தேநீர் தயாரிப்பாளரும் உடனடியாக பிரபல ஹோட்டல் ஒன்றுக்குத் தேவைப்படுகின்றனர். தொடர்பு:- 226, Bombay Jai Sweets, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். உடன் நேரில் வரவும். (8891)

மணமகன் தேவை

Stenographer தராதரமுடைய இந்து வேளாள மணமகளுக்குசெவ்வாய்க் குற்றமற்ற 32 வயதுக்கு மேற்பட்ட மணமகன் தேவை. சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். இல, 436, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8895)

மணமகள் தேவை

இந்து உயர்குல பெற்றோர் தவியார் வங்கியில் வேலை பார்க்கும் அழகும் நிறமும் உள்ள 28 வயது நிரம்பிய, உயரம் 5' 4'' (அச்சுவிளி 7இல் செவ்வாய் பாவம் 20) உள்ள மகனுக்கு 25 வயது அல்லது குறைவான மணப்பெண் தேவை. சீதனம் பேசித் தீர்க்கலாம். ஆங்கில அறிவு முக்கியம். முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். C/o 27 உதயன். (8996)

தவறிவிட்டது

அரியாலை கிழக்கு, குமாரசாமி-விஜயகுமார் ஆகிய எனதுஅடையாள அட்டை இல. 660440399V சாவகச்சேரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (8893)

தொழிற்கல்வி

வெளி நாடுகளில் பிரபல்யமான தொழில் வாய்ப்புக்கல்வி Radio Officers (Ship)(P.M.G) Telex International Operators (இருபாலாரும்) சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்: 20-1-1989 சுய விலாசமிட்ட முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். Keen - Thirunelvely. (8962)

விசேட பயிற்சி வகுப்புகள்

புதிய பிரிவுகள் றேடியோ, ரெலிவிஷன், டெக் வயறிங், வெல்டிங், பிளம்பிங், றீவைண்டிங், குளிரியல் மோட்டோ மெக்கானிசம் ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன Nesta Technical Institute 59, Station Road, Jaffna. (8688)

★★★ எமது நேற்றைய புதிய வெளியீடு

உஷா சினிமா

உங்கள் சத்யராஜ் — சிவாஜி — ரூபினி கௌதமி — ஜனகராஜ் நடித்த சத்யா மூவிஸ்

புதிய வானம்

(ஒறிஜினல் பிரதி)

உஷா சினிமா

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (9004)

உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

(1)	Secretary	4	500 SR
(2)	Clerk Typist	2	500
(3)	Tele Operator	3	500
(4)	Administration Clerk	4	500
(5)	Telephone Tech.	3	800
(6)	Cushion Maker	3	750
(7)	T. V. Operator	1	700
(8)	Accountant	3	1200
(9)	Electronic Tech.	3	1200
(10)	Governess (English-Medium Nursery)		1000
(11)	Diesal Mechanic	5	700
(12)	Heavy Driver	10	600
(13)	Masons (10 Hrs)	3	700
(14)	Welder	4	700
(15)	Steel Fixer	2	700
(16)	Sheet Fixer	4	700
(17)	A/C Tech	4	750
(18)	Male Secretary	1	900
(19)	Nurse	1	800
(20)	Water Treatment Plant Operator		650
(21)	Water Treetment Plant Foreman		800
(22)	Safety Engineer		1300
(23)	Heavy Equipment Operator		700

Ship Vacancy

[1]	Deck boys	— 250 USD
[2]	Tug master	— 800
[3]	Tug mate	— 600
[4]	Bogun	— 375
[5]	Marine Electrician	— 400
[6]	Marine Mechanic	— 350
[7]	Diver	— 450

Saudi Arabia

[1]	Waiters	— 400 SR
[2]	Diet cook	— 750
[3]	Assistant cook	— 400
[4]	Waitress	— 600

Singapore - Shipyard

Welder	12	— 450 SD
Electrician	8	— 450
Labourer	40	— 350

Construction

Barbender	2	— 400 SD
Carpenter	4	— 400
Mason	4	— 375
Plumber	3	— 375
Labourer	50	— 300

அ. தவச்செல்வம்

B. Sc. [Hons] (ஆசிரியர்)

நெல்லியான் வீதி, சுன்னாகம் (C-1503)

பிரதேச சபை எல்லைக்குள்

அரச அங்கீகாரம் இன்றி கட்டடங்களைக் கட்டத் தடை

உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றுநிருபம்

காங்கேசன்துறை, ஜன 18

கிராமப்புறங்களில் அரச அங்கீகாரம் இன்றி கட்டடங்களை அமைக்கலாம் என்றிருந்த சலுகை நீக்கப்பட்டு, பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பகுதிகளில் அரச அங்கீகாரம் இன்றி கட்டடங்கள் எதையும் அமைக்க முடியாது என்னும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர் திரு. எஸ்.ஏ. ஜினதாசா இது குறித்தச் சுற்று நிருபம் ஒன்றைப் பிரதேச சபைகளின் ஆணையாளர்களுக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

முன்பு இருந்த உள்ளூராட்சி அமைப்பில் பட்டினசபை, நகரசபை, மாநகரசபைப் பகுதிகளில் மட்டுமே அரச அங்கீகாரம்பெற்றுக் கட்டடங்களையோ, வீடுகளையோ அமைக்கவேண்டும். அதேநேரம், கிராம சபைப் பகுதியில் அரச அங்கீகாரம் இன்றியே கட்டடங்களையோ, வீடுகளையோ அமைக்கச் சலுகை அளிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் தற்போது அமுலுக்குவந்துள்ள பிரதேச சபை அமைப்பில் பட்டினசபை, கிராமசபை ஆகியன இயங்கிய பகுதிகள்யாவும் ஒருங்கிணைக்கப்பட்டுப் பிரதேசசபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இனிமேல் பிரதேச சபை எல்லைக்குள் கட்டடங்களையோ, வீடுகளையோ கட்டவேண்டுமானால் அரச அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

அதாவது ஆகாதாரவைத்திய அதிகாரியின் சிபாரிசுடன், பிரதேச சபை ஆணையாளரிதற்கு அங்கீகாரம் வழங்கவேண்டும். (ஒ-68)

ஊர்காவற்றுறையில் மின்கம்ப தயாரிப்பு வேலை மீண்டும் ஆரம்பமாகியது

ஊர்காவற்றுறை, ஜன. 18

ஊர்காவற்றுறையில் உள்ள கொங்கிறீற் மின் கம்பங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் மீண்டும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

இதுவரை காலமும் இப்பகுதிக்குத் தேவையான கொங்கிறீற் மின் கம்பங்கள் மல்லாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஆகிய இடங்களில்குந்தே தருவிக்கப்பட்டன.

உள்ளூரிலேயே மின் கம்பங்கள் தயாரிக்கப் படுவதால் போக்குவரத்துச் செலவுகள் குறையும் என மின்பாவனையாளர் கருதுகின்றனர். (க-16)

மினிபஸ் கட்டணம் குறைப்பு

கரவெட்டி, ஜன. 18

நெல்லியடி மினிபஸ் சங்கம் மினிபஸ் கட்டணத்தைக் குறைத்துள்ளது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இதுவரை கட்டணமாக 6.00 ரூபா அறவிடப்பட்டு வந்தது. பொங்கல் தினம் முதல் இக்கட்டணம் 5.50 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. (இ-70)

ஊரேழுவில் திருவாசக விழா

கொக்குவில், ஜன. 18

ஊரெழு கம்பன் கழகம் ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய முன்றலில் எதிர்வரும் 20ஆம் 21ஆம் 22ஆம் திகதிகளில் திருவாசக விழாவை நடத்துகிறது. தனியுரைகள், பட்டிமண்டபம், கவியரங்கம், கருத்தரங்கு, ஆய்வரங்கு, மேன்முறையீட்டுப் பட்டிமண்டபம் மற்றும் இவர்கள் சந்தித்தால்..... எனும் புதுமை நிகழ்ச்சி ஆகியன நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (ஒ-69)

நயினை ஸ்ரீ நாகபூஷணி ஆலயத்துக்கு 63 நாயன்மாரின் சிலைகள் அடியார்களால் அன்பளிப்பு

வேலணை, ஜன. 18

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய யாத்திரிகர் கல்யாண மண்டபத்தில் வைப்பதற்காக 63 நாயன்மார்களின் சிலைகளை சைவ அடியார்கள் தமது உறவினர்கள்'— பிரியைகளின் நினைவாக ஆலயத்திற்கு வழங்கி இருக்கிறார்கள்.

இச் சிலைகளை கூடிய விரைவில் மண்டபத்தில் வைப்பதற்கான ஒழுங்குகளை அறங்காவலர் சபையினர் செய்து வருகின்றனர். (க-167)

உரிய காலத்தில் நிவாரணம் வழங்குவதே எமது குறிக்கோள்

ரி.ஆர்.ஆர்.ஓ. செயலாளர்உரை

யாழ்ப்பாணம், ஜன. 18

'தமிழ் அகதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணம் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும் அதுவே எமது குறிக்கோளாகும். நாம் வழங்கும் நிவாரணங்களை வெளிநாட்டிலுள்ள உதவி நிறுவனங்களில் இருந்தும் உள்நாட்டு நிதி உதவியாளர்களிடமிருந்தும் பெறுகிறோம்'.

சென்ற ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின போது பாதிப்புற்றவர்களுக்கு கயதொழில் செய்யக் கூடிய வகையில் உதவி அளிக்கும் பொருட்டு தையல்மெசின், தண்ணீர் இறைக்கும் பம்புகள், மீன்பிடி வலைகள் சிகை அலங்கார உபகரணங்கள் ஆகியவற்றை அன்பளிப்புச் செய்து வைபவத்தில் உரையாற்றும்போது யாழ் 'தமிழர் புனர்வாழ்வு நிதியம் 1983' நிறுவனத்தின் செயலாளரான இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கிட்டிணர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வைபவத்துக்கு முன்னாள் அரசாங்க அதிபரும், யாழ். ரி. ஆர். ஆர் ஓ. 1983 இன் தலைவருமான திரு. எஸ். சிவஞானம் தலைமை வகித்தார்.

திரு. கிட்டிணர் தனது உரையில் இன்றைய நிகழ்ச்சியை ஒரு பெண்களுக்கான நிகழ்ச்சி என்று கூறலாம். பாதிக்கப்பட்ட பெண்கள் வாழ்வதற்கு வழி வகுக்கவே நாம் இன்று கயதொழில் செய்யக்கூடிய உபகரணங்களை வழங்குகிறோம்' என்றார்.

யாழ் லயன்ஸ் கழகப் பிரதி ஆணையாளரான திரு இ. விஜயரத்தினம் உரையாற்றுகையில், 'நாம் நிவாரண உதவிகளை சதி அற்றவர்களுக்கே வழங்கி வருகிறோம் அத்துடன் எமது கொடுப்பனவுகள் எல்லாம் சரியாகக் கணக்கு வைக்கப்படுவது எமது நிறுவனத்தின் சிறப்பு அம்சமாகும்' எனச் சொன்னார்.

யாழ். வை. எம். சி. ஏ, வை. டபிள்யூ சி ஏ ஸ்தாபனங்களின் தலைவி திருமதி அரியரத்தினம் பேசுகையில், தாம் யுவதிகளுக்கு 6 மாதகால தையல் பயிற்சி அளித்து அவர்களுக்கு ஈற்றில் சான்றிதழ்கள் வழங்குவதாகக் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு 30 தையல் மெசின்கள் யாழ். புனர் வாழ்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

அனுமதி

இளவாலை மெய்கண்டான்கல்லூரியில் ஜி. சி. ஈ உயர்தர வகுப்பு தொடங்க அனுமதி கிடைத்துள்ளது.

உயர்தர பரீட்சை முடிவுகள் இம்முறை சிறந்த முறையில் அமைந்திருப்பதாகப்பெற்றோர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இவ் வித்தியாலயத்தில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 12 பேரில் 10 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

பிறந்த நாள் வாழ்த்து

செல்வப் புதல்வன் மு. லயனல் (சதீஸ்)

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த முருகையா செல்வி தம்பதிகளின் செல்வப் புதல்வன் லயனல் [சதீஸ்] இரண்டாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் இன்று குதூகலமாக கொண்டாடுகின்றார். இவரை குவைத் பப்பா, மம்மி, அம்மம்மா, அப்பம்மா, அராலி பெரியமமி குடும்பத்தினர், முல்லைத்தீவு [விஜியமாமா, ஜெயம் மாமா குடும்பத்தினர், கொழும்பு யோகா குடும்பத்தினர், கிச்சி அன்ரா குடும்பத்தினர், பெரியப்பா, அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார் அனைவரும் யேசுவின் அருளால் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (9006)

சிவாகி

சிவன்வீதி, சாவகச்சேரி.

A/L 89 PAPER CLASS

ஆரம்பம்: 18-01-89 புதன் 4. 30p.m

கணக்கியல்:- S.K பிரபாகரன்

வர்த்தகம்:- இரட்ணம்

அரசாங்கத்திய அனுமதிகள் ★ (9180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். போதனா வைத்தியசாலைக்கு

என்னால் முடிந்த உதவிகளை முழுமூச்சுடன் செய்துதருவேன்

செயலாளர் நச்சினார்க்கினியன் உரை

யாழ்ப்பாணம் ஜன 18

மாகாண சபை மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வேண்டிய சகல உதவிகளையும் என்னால் முடிந்தளவு செய்ய முழு மூச்சுடன் செயற்படுவேன்.

வடக்கு - கிழக்கு மாகாணசபை சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ் நச்சினார்க்கினியன் நேற்று முன் தினம் நடந்த பிரிவுபசார வைபவத்தில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்-போதனா வைத்தியசாலையில் பணிப்பாளராகக் கடமையாற்றி மாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ள அவருக்கு யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்களினால் திங்கள்கிழமை பிரிவுபசார வைபவம் ஒன்று நடத்தப்பட்டது.

காலை 9-30 மணிக்கு ஊழியர்களின் பரவேற்புடன் அழைத்துச் செல்லப்பட்ட டாக்டர் நச்சினார்க்கினியன் ஆஸ்பத்திரியிலுள்ள வைரவர் கோவிலில் நடைபெற்ற விசேட பூசையிலும், கிறிஸ்தவ ஆலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனையிலும் கலந்து கொண்டார்.

இவ் வைபவம் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் செல்வி புஷ்பம் சண்முகம் தலைமையில் நடைபெற்றது

டாக்டர் நச்சினார்க்கினியன் வைபவத்தில் பேசுகையில் மேலும் சொன்னதாவது;-

யாழ்-போதனா வைத்தியசாலையில் நான் எட்டு வருடங்களாகக் கடமையாற்றியுள்ளேன்.

இந்தக் காலங்களிலேயே நான் உயர்ந்த பதவிக்கும் வந்தேன். அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தான் காரணம்.

எந்த ஒரு நிறுவனமும் ஒருவனால் மட்டும் உயர்ந்த நிலைக்கு வர முடியாது.

அங்கு கடமையாற்றும் சகல ஊழியர்களது ஒத்துழைப்புமே நிறுவனத்தின் உயர்ச்சிக்கு உதவுகிறது.

நான் இங்கிருந்து போவதால் யாழ் ஆஸ்பத்திரியின் உயர்ச்சி குறைந்துவிடப் போவதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

கணக்காளர் திரு. சிவலிங்கம் உரையாற்றுகையில்—

யாழ் ஆஸ்பத்திரி 1987 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மூடவேண்டிய ஒரு கட்டம் வந்தபோது பணிப்பாளர் எதிர் நீச்சல் போட்டு அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதை முறியடித்தார்

வடபகுதியில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்த வேளைகளில் எல்லாம் ஆஸ்பத்திரியை திறம்பட இயக்கிய பெருமை பணிப்பாளரையே சாரும் — என்றார்.

திரு. கந்தசாமி, திருமதி கந்தசாமி, திரு. எஸ் குமாரசாமி, திரு விக்னேஸ்வரன், திரு. வினாயகமூர்த்தி. திரு. வடிவேலு ஆகியோரும் உரையாற்றினர்.

டாக்டர் எஸ் சிவகுமாரன் நன்றியுரை ஆற்றினார்

இறுதியாக யாழ். வெளி நாயாளர் பரிவில் அமைக்கப்பட்டுள்ள இரத்த சுத்திகரிப்பு, சிறுநீர் சுத்திகரிப்பு செய்யக் கூடிய நவீன சிகிச்சைப் பிரிவையும் டாக்டர் நச்சினார்க்கினியன் திறந்து வைத்தார். (ஒ-10)

பழைய இடத்தில் மீண்டும் படை முகாம்

பருத்தித்துறை, ஜன.18

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தைச் சுற்றி மீண்டும் இந்திய அமைதிப்படையினர் மடங்களுடன் கூடாரங்களை அமைத்து பரந்த அளவில் முகாமிட்டுள்ளனர்.

இவர்கள் அடிக்கடி அம்பன், குடத்தனை, மணற்காடு, வல்லிச்சண்டி ஆகிய பகுதிகளில் தேடுதலில் ஈடுபடுகின்றனர்.

பருத்தித்துறை-ஆழியவளை வீதியில் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள வாகனங்கள் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன.

எனினும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மூன்று கால வேளைப் பூசைகளும் தங்குதடையின்றி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-118)

நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்பதே பிரதானம்

சிரமதான வைபவத்தில் உரை

குருநகர், ஜன 18

'எனக்கு நாடு என்ன செய்தது என்பதை விடுத்து நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்பதே பிரதானம்'.

இருபாலை சி. சே. ரி. எம். பாடசாலையை கிராம மக்களும். 'நல்லதைச் செய்வோம்' அமைப்பும் இணைந்து சிரமதானம் மூலம் புனரமைத்த வைபவத்தில் கலந்து கொண்டு சிரமதானத்தில் ஈடுபட்டோருக்கு பரிசுகள் வழங்கி பேசுகையில் 'சிவதர்மவள்ளல்' திரு. க. கனகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நல்லதைச் செய்வோம்' அதிபர் இராமலிங்கம் வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

திரு. க. கனகராசா மேலும் பேசுகையில் 'மகாத்மா காந்தியின் பிரதான திட்டங்களில் ஒன்று கிராமங்களை முன்னேற்றுவது கிராமங்கள் முன்னேறினாலே பட்டணம் முன்னேறும்.

அதனால்தான் அவர் ஒரு 'கிராம ராஜ்யம்' என்னும் நூலையும்எழுதி வெளியிட்டார் என்றார்.

இறுதியில் மில்க்வைற் அதிபர் விழாவில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் மரக்கன்றுகளை அன்பளிப்புச் செய்தார். (இ-51)

கோரிக்கை

மண்டைதீவு ஜன 18

வேலணை பிரதேசசபையின் மண்டைதீவு உப அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் பொது நூல் நிலையத்தை விடுமுறை நாட்களிலும் திறந்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேலணை பிரதேச சபை கோரிக்கை விடுத்தன்னது (க-88)

படகு ஊழியருக்கு சீருடை

நெடுந்தீவு ஜன 18

நெடுஞ்சாலைகள் நிலைக்களத்தின் நெடுந்தீவு - குறிகட்டுவான அரசமோட்டார் படகு ஊழியர்களுக்கு விரைவில் சீருடைகள் வழங்கப்படும்

சீருடைக்கு வேண்டிய துணிகள் தற்சமயம் இங்கு வந்து சேர்ந்துள்ளன. ஊழியர்களுக்கு இதை விநியோகிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர் திரு எஸ். சற்குணராஜா உதயனுக்குத் தெரிவித்தார். (இ-111)

ஐக்கியநாணய சங்கம் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஜன 18

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பதின்மூன்று கிராம சேவையாளர் பகுதிகளில தேசிய வீடமைப்புக் கடனைப் பெற்றுவரும் ஐக்கிய நாணய சங்கங்களில் மானிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கம் முன்மாதிரியாகத் திகழ்கிறது-

மானிப்பாய் வடக்கு ஐக்கியநாணய சங்கம் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. க. தெய்வேந்திரம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத் தலைவர் திரு. இ. வல்லிபுரம் தலைமையில் கூட்டம் நடபெற்றது. (இ)

நூல் நிலையத்துக்கு நிதி ஒதுக்கீடு

மண்டைதீவு, ஜன 18

வேலணை அபிவிருத்திச் சபையின் மண்டைதீவு உப அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் பொது நூல்நிலையத்துக்கு 1,800 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

இப் பணத்தைக் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கும், வாசகர்களுக்கும் பயன்தரக் கூடிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட இருக்கின்றன. (க-88)

அன்பளிப்பு

யாழ். கனகரத்தினம் ம. ம. வி சடந்த ஆண்டு க. பொ. த. (சா) பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தி பெற்ற செல்வன் ஜச்சன் ஜீவாவுக்கு பா, அ சபையினர் 1000/- ரூபாவை அன்பளிப்புச்செய்தனர்.

பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதுடன் பெற்றோர் கடமை முடிந்துவிடக் கூடாது

பிரதம கல்வி அதிகாரி உரை

யாழ்ப்பாணம், ஜன, 18

"பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதோடு பெற்றோரின் கடமை முடிந்து விட்டதாகக் கருதிவிட முடியாது. அவர்கள் கல்வியில் பெற்றோரும் அக்கறை செலுத்த வேண்டும், பிள்ளைகள் பொறுப்புடன் கவனிக்கப்பட்டாலேயே பெற்றோர் தமது பிற்காலத்தில் எதிர்பார்க்கும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வடமாநில பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையில் புதுப்பித்துக் கட்டப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பாடசாலை அதிபர் திரு. நா. நடராசா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திரு. கு. சோமசுந்தரம் மேலும் பேசுகையில் ஆரம்பப் பாடசாலைகளில் தற்போது நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது,' என்றார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தமது உரையில், "பின் தங்கிய ஏழைப்பிள்ளைகளின் நலன் கருதி ஸ்தாபிக்கப்பட்ட இப் பாடசாலைவளர்ச்சி அடைந்து வருவது குறித்து தாம் மிகக மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார்.

அதிபர் திரு. நடராசா தமது தலைமை உரையில், எத்தனையோ மைல்களுக்கு அப்பாலுள்ள 'நொறுட்' ஸ்தாபனத்தார் இப் பாடசாலைச் சிறார்களின் நலன் கருதி நிதி உதவி செய்தமைக்கு தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

கல்வித் திணைக்கள பொறியியலாளர் திரு. ம. அன்ரனி பிரான்சிஸ் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

சம்பூரணி கல்வி அதிகாரி திரு. எஸ். இரத்தினராஜா, பாடசாலை ஸ்தாபகர் திரு. சிவைலாயபிள்ளை ஆகியோரும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

ஆசிரியை திருமதி சரஸ்வதி வரவேற்புரை நிகழ்த்தினார். (இ)

வல்வை பொலீஸ் நிலையம் இடம் மாறுகின்றது

வடமராட்சி, ஜன. 18

வல்வைப் பொலீஸ் நிலையம் இடம் மாறுகிறது.

சடந்த வருடம் ஜூலை கலவரத்தைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையம் வல்வை சிதம்பராக் கல்லூரியில் இயங்கி வந்தது.

தற்போது சிதம்பராக் கல்லூரி இயங்கத் தொடங்க இருப்பதைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையம் வல்வை சிதம்பராக் கல்லூரியில் இயங்கி வந்தது. (இ-160)

பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

S-Lon Lanka (Pvt) Ltd.
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 596206 — 93716 - 9

தேவை

எமது நிறுவனத்திற்கு பியோன் ஒருவர் தேவை. 25 வயதிற்கு உட்பட்டவராகவும், யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவராகவும் இருப்பின் விரும்பத்தக்கது தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் வெள்ளிக்கிழமை (20-1-89) காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(C/1342)

எபனி ரவல்ஸ்

எமது புது வருட
நல்வாழ்த்துக்களுடன்
ஓர் நற்செய்தி!

வெளிநாட்டிற்குச் செல்ல
ஓர் அரிய சந்தர்ப்பம்

★ குவைற் (KUWAIT)

சுத்திகரிப்பாளர் (Cleaners) 35 KD
தொழிலாளர் (Labourers) 35 KD

சாப்பாடு இல்லை (without Meals)
உடனடியாக 400 பேர் செல்லலாம்.
வயதெல்லை 18 - 48 வரை
எமது குவைத் முகவரே நேர்முகப் பரீட்சையை கொழும்பில் நடத்துவார்.
(முற்பணம் அறவிடப்படமாட்டாது)
மேலும் விபரங்களுக்கு உடனடியாக நேரில் சந்தியுங்கள்:

EBANEE TRAVELS
29, நாயன்மார் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(9172)

யாழ்-கோழும்புப் பிரயாணிகளே!

உங்களின் இன்றைய நிலைகருதி
நொடிப் பொழுதில்...!

★ சர்வதேச தொலைபேசித் தொடர்பு கொள்ளவும்
★ செய்திகளை Telex மூலம் பரிமாற்றம் செய்து கொள்ளவும்
★ ஆவணங்களை Fax மூலம் பரிமாற்றம் செய்து கொள்ளவும்

தங்கும் வசதிகளுடன் நவீன அறைகள் வழங்குகின்றோம்.
தனித்தனி குளியலறையும் மலசல கூடம் இணைக்கப்பட்ட நவீன நீச்சல் தடாக வசதிகள் கொண்ட நாள் கட்டண-மாதக் கட்டணங்களில் உணவு வழங்கலுடனோ அல்லாமலோ உங்களுக்கு

வெள்ளவத்தையில் உள்ள
நட்சத்திர ஹோட்டலில்

தங்கும் அறைகள் வழங்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

கட்டண விபரம்:
நான்கு பேர் தங்கக் கூடிய அறை
★ நாள் ஒன்றிற்கு ரூபா 200/-
★ மாதக் கட்டணம் ரூபா 3000/-

முக்கிய குறிப்பு:
வெளியிலிருந்து மதுபானம், சாப்பாடு பேன்றவற்றை ஹோட்டலுக்குள் கொண்டு வருவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தொடர்பு:
ஹோட்டல் சிலோன் இன்ஸ்
501, காலி வீதி,
கொழும்பு - 6.
தொலைபேசி இலக்கங்கள்:- 580474, 580475, 580476.

முன் கூட்டியே யாழ்நகரில் பதிவு செய்ய எம்மை நாடவும்.

மீரா டிரவல்ஸ்
(MEERA TRAVELS)
கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.
(8882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய சீன சுவர்க் கலண்டர்கள் அன்பளிப்பாக உடன் பெற்றுக்கொள்ளலாம்

1989-ம் ஆண்டிற்கான சீன சஞ்சிகைகளுக்கு சந்தா செலுத்துவோருக்கு மேற்படி அன்பளிப்புகள் உடன் வழங்கப்படும்.

சந்தா விலை விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி,
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(8991)

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி ஏஞ்ஜல் கிரி
(மதுரம்)

தோற்றம்: 10-06-1953 மறைவு: 18-01-1988

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பின்,

இங்கிலாந்திலுள்ள:
கணவன், மைத்துனர்மார் குடும்பங்கள், மைத்துனி குடும்பம், சகோதரன் குடும்பம்.

நல்லூரிலுள்ள:
மாமன், மாமி, மைத்துனர்.

காரைநகரிலுள்ள:
தாய், சகோதரி குடும்பம், மாமன், மாமி, மற்றும் உறவினர்கள்.

செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம் (8999)

அரையாண்டு நினைவஞ்சலி



செல்வன் காசிநாதன் யுகநாதன்
நில அளவைத் திணைக்களப் பணியாளர்
[வாகரை]

அன்னை மடியில்: 05—02—1967
ஆண்டவன் அடியில்: 22—07—1988

திதி: 18—01—1989

அன்பின் செல்வமே எமதருமை யு நாதனே!
என்பெல்லாம் மிகவுருகி ஏங்குகின்றோம் நின் பிரிவால்
உழைப்பதற்கென்றே ஊக்கமுடன் சென்ற உன்னை
இழப்பதற்கு நாம் செய்த கொடும்பாவம் தானியாதோ?
கீழ்வானம் சிவக்க கிழக்கூர் சென்ற உற்றன் வாழ்வு பறிபோன மரிமமதை அறியாமே
நோயுற்றாலும் உனதருமைப் பெற்றோரும், உனதினிய சகோதரரும், மைத்துனரும் உற்றாரும்,
ஓய்வு சிறிது மின்றி உன்பிரிவால் வாடுகின்றோம்
பல இன மக்களுடன் பண்புடன் பழகும் யுகா-இவ்
வுலகினிலே உனைப்பிரிந்து உய்வது நாம் எப்படியோ?
மூவேழு வயதினிலே முடிவு உலக்கு உண்டானதை
நாவினால் எடுத்துரைக்க நடுங்குதையா எம்மிதயம்
உயிரற்ற உடலையேனும் காணாத தன்மையினால்
வயிறு பற்றி எரியுதப்பா வடிவழகா எங்கு சென்றாய்?
யுகம் ஒன்று சரிந்தாலும் உன்பிரிவை நாமெல்லாம்
அகமதிலே மறந்துவிடோம் அன்புள்ள யுக நாதனே
பூரண சாந்தி உன் ஆத்மா அடைவதற்கு-பரி பூரணராகும் பரமசிவத்தைபராவுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர், மருமகள், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

"ஆண்டவளவு"
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை. (9178)

தற்காலிக கட்டடங்களை அமைத்தாவது

பாடசாலை மீண்டும் இயங்க உடன் நடவடிக்கை எடுக்குக!

கல்விப் பணிப்பாளருக்கு மகஜர்

காங்கேசன்துறை, ஜன. 18

தற்காலிககட்டடங்களை அமைத்தாவது பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயத்தை மீண்டும் இயங்க வைக்க கல்வித் திணைக்களம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் பெற்றோர், மாணவர்களால் ஆரம்பிக்கப்படவுள்ள நேரடிப் போராட்டத்துக்கு நாமும் பூரண ஆதரவு கொடுத்துப் பங்கு கொள்ளும் நிலை ஏற்படும்.

பலாலி கிழக்கு இராஜராஜேஸ்வரி சனசமூக நிலைய செயலாளர் திரு. த. நாகராசா வடமாநில கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

பலாலி கிழக்கு இராஜராஜேஸ்வரி சனசமூக நிலையத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பலாலி சித்தி விநாயகர் வித்தியாலய நிலத்தையும், கட்டடங்களையும் இலங்கை இராணுவம் சுவீகரித்த படியால் இவ் வித்தியாலயம் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கக் கட்டடத்திலும், பலாலி மத்திய கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றது.

பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரும்படி அபிவிருத்திச் சபை கேட்டும் திணைக்களம் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பாடசாலையை அமைக்கப் பெற்றோர் 21 பரப்பு காணியை நன்கொடை செய்துள்ளனர்.

காணி கொடுத்து 6 மாதங்களாகியும் அக் காணியில் கட்டடம் போடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியும் இப் பாடசாலையைப் புனரமைப்பதற்குக் கிடைத்துள்ள போதிலும் அந்நிதியுதவியும் பயன்படுத்தப்படவில்லை

இந்நிலையில் தற்போது பாடசாலை இயங்கும் கட்டடத்தைக் காலி செய்து தரும்படி ப. நோ. கூ. சங்கம் அறிவித்தல் கொடுத்துள்ளது.

இதனால் இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவரின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது. (ஒ ச-68)

அந்திம கால சேவை

சுழிபுரம், ஜன 18

சுழிபுரம் அந்திம கால பணவுதவிச் சங்கத்தினர், சங்கத்துடன் இணைந்த அந்திமகாலச் சேவைப் பகுதியையும் நடத்தி வருகின்றனர். சேவைப்பகுதியோடு சம்பந்தமான சுருமங்கள் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் மிக இலகுவாகத் தமது தேவைகளை நிறைவேற்ற முடிகின்றது. (க-28)

சேவைக்காலப் பயிற்சி நாளை

மானிப்பாய், ஜன. 18

முதலாம் ஆண்டில் கல்வி கற்பிக்கும் மானிப்பாய் வட்டார பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக் காலப்பயிற்சி நாளை வியாழக்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

முதலாம் ஆண்டு கல்விசற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இப்பயிற்சியில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது (ச-90)

அறங்காவலர் சபைத் தேர்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் மகாசபைக்கு 1989 ஆம் ஆண்டுக்கு மொத்தம் முன்னூற்றி எண்பத்தைந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இவ்வருடம் அறங்காவலர் சபையிலிருந்து பதவி விலக இருக்கும் ஆறு உறுப்பினர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது

இதற்கான வேட்புமனுக்கள் இம்மாத நடுப்பகுதியில் அறங்காவலர் சபையால் கோரப்பட இருக்கிறது [ச-167)

பொதுமக்கள் பணியில் ஈடுபடுவோர்

எத்தகைய தியாகமும் செய்யத் தயாராக வேண்டும்

பொது மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயலாற்றுபவர்கள் எத்தகைய தியாகத்தையும் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். இக் கிராம மக்களின் உண்மையான பங்களிப்புடன் சிறப்பாக இயங்கும் இந்நிலையத்தின் நூலகத்தை உழவர் திருநாளான இன்று ஆரம்பித்து வைப்பதில் பெரிதும் மகிழ்வடைகிறேன்.

உடுவில்உதவிஅரசாங்க அதிபரும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளருமான திரு. ஆ. மகாலிங்கம் இவ்வாறு கூறினார்.

சுன்னாகம் வடக்கு மயிலணி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் தைப் பொங்கல் தினத்தன்று நூலகத்தை திறந்து வைத்து அவர் உரையாற்றினார்.

திருக செல்வநாதன் தலைமையில்நடைபெற்ற இத்திறப்பு விழாவைபவத்தில்உதவிஅரசாங்க அதிபர் திருமகாலிங்கமும் சமூகசேவையாளர் திரு இளையதம்பியும் மங்கள விளக்கேற்றினர்.

செயலாளர் திரு. சிதர்மலிங்கத்தின் வரவேற்புரையின் பின் திரு செல்வநாயகம் திரு ஜ நவரத்தினம் திரு முருகதாஸ் உட்பட பலர் ஆசியுரைவழங்கினார்கள்

நூலகத்தைத் திறந்து வைத்து திரு ஆ. மகாலிங்கம் தொடர்ந்து பேசுகையில் எமது பகுதியில் இயங்கிவரும் பல ஸ்தாபனங்களின் நிதி நிலைமையும் பணிகளின் அளவும் ஒன்றிற்கொன்று முரண்பாடாக இருக்கின்றன பொதுமக்களின் ஒத்துழைப்பு பொது ஸ்தாபனங்களுக்குக் கிடைப்பது குறைந்து வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

பின் தங்கிய மக்களுக்கான வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கான நடவடிக்கைகள் துரிதகதியில் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் அறியாமையை ஒழிக்கவும் மேற்கொள்ளப்பட வேண்டியது எனது விருப்பமாகும் என்றார். (இ 27

ஆசிரியர்கள் பொறுப்பு உணர்ந்து சிறப்பாகப் பணிபுரிய வேண்டும்

மெதடிஸ்த, மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில்உரை

கரவெட்டி, ஜன 18

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டால் போதுமெனப் பெற்றோர் கருதி விடக் கூடாது. பிள்ளைகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் அவர்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களும் தமது கடமைகளின் பொறுப்புக்களை உணர்ந்து சிறப்பாகப் பணிபுரிய வேண்டும். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி பல்வேறு துறைகளிலும் சாதனைகளை நிலை நாட்டி வருவது பாராட்டுக்குரியது

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் கலை விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தலைமையில் வடஇந்துமகளிர்கல்லூரி மண்டபத்தில் வைபவம் நடைபெற்றது வைபவத்தில் கலைவிப்பணிப்பாளர் மேலும் உரையாற்றுகையில கூறியதாவது:-

மாணவர்களை பல்வேறு துறைகளிலும் வல்லுநர்களாக வாழ்வையில் வெற்றி பெறச் செய்து நாட்டுக்கு உகந்த பிரஜைகளாக உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

கல்வி அபிவிருத்தி மேம்பாடுகளுக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கள் மனிதன செய்யும் தானங்களில் தலைசிறந்த தானமாகும். எனவே கல்வித்தானத்துக்கு ஒவ்வொருவரும் தம்மாலான உதவிகளை வழங்க வேண்டும்.

மாணவர்கள் மத்தியில் கலை ஆர்வங்களை ஊட்ட வேண்டும். கலைகள் கல்வியை ஊட்டுவதற்குச் சிறந்த சாதனங்களாகத் திகழ்கின்றன. கலை விழாக்களைப் பாடசாலைகளில் நடத்துவதன் மூலம் மாணவர்கள் பல்வேறு வகையான நன்மைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இக்கல்லூரி இசை, நடன, நாடகத்துறைகளிலும் முன்னணியில் திகழ்வதை இக் கலை விழாவில நடைபெற்ற நிகழ்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன.

இப்படி அவர் கூறினார்.

வைபவத்தில் வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி செல்வி ரீ. பெரியதம்பி, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. ஏ. வி. தங்கராசா, (கல்வி அதிகாரி) பருத்தித்துறை கொத்தணி அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம் வடஇந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ், சுப்பிரமணியம் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களான திரு. வி. இராசையா, திரு. ரீ. சற்குணானந்தராஜா, திரு. எஸ். திருச்செல்வம், திருமதி எஸ், வாசதேவன், உட்பட மேலும் பலர் கலந்து கொண்டனர்,

திருமதி புஷ்பவதி சபாநாயகம் பரிசில்களை வழங்கினார்.

மாணவதலைவி செல்வி வாசுகி கணபதிப்பிள்ளை நன்றியுரை நிகழ்த்தினார். (இ-70)

ஆற்றலை வளர்ப்பதற்கு சனசமூக நிலையம் உதவ வேண்டும்

நெடுந்தீவு ஜன-18

சிறந்த நூல்களைப் படிப்பதற்கும் ஆற்றலை வளர்ப்பதற்கும் துறைமுகத்தில் அமைந்துள்ள இந்தச் சனசமூகநிலையம் மகத்தான பணியாற்ற வேண்டும்.

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் செயலாளர் திரு. யோ. செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

நிலையத் தலைவர் திரு. ப. இரகுபதிதலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு ம சேவியர் பேசும் போது எமது நினையத்தில் ஒரு காட்சி அகமொன்றை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

திரு க.கணேசலிங்கம் பேசும் போது பத்திரிகைகள் நூல்வழங்குதல் போன்றவற்றுடன் இந்நிலையம் நின்றுவிடாது சிரமதானப் பணிகளிலும் ஈடுபட வேண்டும்' என்றார்

சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கான செயற்பாடுகள் குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது (இ-111)

90ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
நடராஜா சசிவண்ணன் (ரவி)
புங்குடுதீவு- 3

அன்னைமடியில்: 01 - 01 - 1970 அழிப்பு: 21 - 10 - 1988

எமது வானில்
உதய நிலவாக உலாவந்த உன்னை
நீ சுடர் விடும் முன்னே
அநியாய முறையில்
உதிரச் செய்து விடினும்
உன் மெய்யழிந்து
மாதங்கள் மூன்று போயினும்
அழியாத நினைவுகளை
அளித்து விட்டுச் சென்ற
உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

நெஞ்சிருக்கும் வரை நீங்காத நினைவுகளோடு பறி கொடுத்துத் தவிக்கும்:

அம்மா, அண்ணாமார், அக்காமார், அண்ணி, மைத்துனர்மார், மகள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (9167)

அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம், உடுவில், ஏழாலை
உப அலுவலகங்கள்

வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம்

மேற்படி கட்டளைச் சட்டம், அது தொடர்பான உப விதிகள் சுற்று நிருபங்கள் ஆகியவை வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் சகல பகுதிகளிலும் அமுல் படுத்தப்பட்டுள்ளது ஆகவே இப் பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் சுன்னாகம், உடுவில், ஏழாலை ஆகிய உப அலுவலகப் பகுதிகளில் சபை அங்கீகாரமின்றி கட்டடங்கள் அமைக்கக் கூடாது என்பதைப் பொதுமக்களுக்கு அறியத் தருகிறேன்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலி-தெற்கு பிரதேச சபை அலுவலகம்,
சுன்னாகம். 10 01 1989. (C/1349)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஐ செல்வச்சோதி
(பொலீஸ் சார்ஜன், யாழ்ப்பாணம்)

தோற்றம்: 10-07-1933
மறைவு: 15-01 1984
திதி: 18-01-1989

மனைவி, மக்கள், மருகன், பேத்தி. (9179)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. த. சண்முகநாதன்

தோற்றம்: 10- 06 1930 மறைவு:- 29- 01- 1988

திதி:- 18- 01- 1989

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடர் ஒளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் மகிழ்வோடு வாழ்ந்து இடைநடுவில் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டகன்ற எங்கள் அன்புத் தெய்வமே!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்.

"லக்ஷ்மி விலா"
வல்வெட்டி (8840)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

காணுதான் காட்டுவான் தான்காணுன் காணுதான்
கண்டானும் தானாகண்ட வாறு.

பொருள்:

அறிவு இல்லாதவனுக்கு அறிவிப்பவன் தானே அறிவில்லாதவனாய் நிற்பான்; அறிவு இல்லாதவனோ தான் அறிந்த வகையால் அறிவுள்ளவனாத் தோன்றுவான்.

உதயன்

இல. 292/3 ந. வளர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
18. 1. 1989 த. பெ. இல 23

அறிவு வளர்ச்சிக்கு சிதை முட்டாதீர்!

பாலர் பாடசாலை ஆசிரியர்களின் பணி என்னென்ன, அவை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. மன்னாரில் நடந்த வதிவிட பயிற்சிநெறிப் பூர்த்தி விழாவில் அப்பகுதியின் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். ஏ. சி. முகைதீன், பாலர்களுக்கு கல்வி ஊட்டுவதற்கான வழிமுறைகள், நெறிமுறைகள் விவரமாக விளக்கியுள்ளார்.

பாலர்கள் மாணவர்கள் ஆகிறார்கள். மாணவர்களே நாட்டின் பிரசைகளாக வளர்பவர்கள். ஆகையால் பாலர் கல்வி நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு, அறிவும், திறமையும், நற்குணமும் உள்ள பிரசைகளை உருவாக்குவதற்கு அடித்தளமானது.

பிள்ளைகள் பாலர்களாக இருக்கும்போது உறையும்ஒழுக்கங்களும், பழக்கவழக்கங்களும், அடிப்படைக் கல்வியுமே அவர்கள் வளர்ந்த பின்னரும் மனதில் பற்றி நிற்பவையாகும்.

இளம் பருவத்தில் புகட்டப்படுபவை பாலர் நெஞ்சங்களில் பசுமரத்தாணி போலப் பதிந்துவிடும் தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும் இருக்கும் என்பதையும் மறந்து விடுவதற்கில்லை.

ஆகையால் ஒவ்வொரு பிள்ளைக்கும் பாலர் கல்வி உறுதியான, சீரான அத்திவாரமாக அமைய வேண்டியது அவசியம்.

அறிவும், நல்லொழுக்கமும் உள்ள பிரசைகளை உருவாக்குவதற்கு அடித்தளம் இடும் பெரும் பொறுப்பு பாலர் ஆசிரியர்களைச் சார்ந்து நிற்கிறது.

சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அதனால் அவர்களுக்கு சமூகத்திலும் தனி இடம் உண்டு. அந்தப் பொறுப்பை உணர்ந்து அவர்கள் பணிபுரிய வேண்டும். அத்தோடு அவர்களுக்கு வேண்டிய பயிற்சி அளிக்கப்படுவதும் அவசியமாகும்.

கற்றலுக்கான பின்னணியை உருவாக்குவதேபாலர் பாடசாலை ஆசிரியர்களின் பணிகளில் பிரதானமானது என்று கல்விப் பணிப்பாளர் ஜனாப் முகைதீன் தெரிவிக்கிறார்.

எத்தனை பாலர் பாடசாலைகளில் அத்தகைய பின்னணி வளர்க்கப்படுகிறது?

சின்னக் குழந்தைகள் தானே, சாதாரணமாகப் படித்த எவரும் அவர்களுக்குக் கற்பிக்கலாம் என்ற எண்ணம் தப்பானது. அவர்களுக்கெனக் கற்பிப்பதற்கு விசேட வழிமுறைகள் உண்டு பாலர் ஆசிரியர்கள் அவற்றில் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பது மிகவும் பிரதானமாகும். அந்தப் பயிற்சி ஒரு சில கிழமைகளுக்கான பயிற்சியாக இருந்தால் பயனில்லை பூரண பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

இது இப்போது நியமனமாகும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் பொருந்தும் அவர்களும் வயது குறைந்த சிறார்களுக்கே பயிற்றுவிக்கப் போகிறார்கள்.

ஆசிரியர் பற்றாக்குறை உண்டென்பதையும், பலருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்பதையும் மனதில் வைத்துக்கொண்டு, ஆசிரியர்களை நியமனம் செய்வது, அதுவும் பாலர், ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களை நியமிப்பது எதிர்காலப் பிரசைகளின் கல்வியுடன் விளையாடுவதாகும்.

சிறார்களுக்குப் பயிற்றுவிப்பதற்கென விசேட ஆசிரியர்களை உருவாக்க வேண்டும். அதில் ஆசிரியர்கள் நிபுணத்துவம் பெறும் விதத்தில் பிரஸ்தாப பயிற்சி அமைவது அவசியம். திட்டமிட்ட பயிற்சி வழங்கப்பட வேண்டும். பூரணத்துவமான பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். குறுகிய காலப் பயிற்சிகள் அன்றி நீண்ட காலப் பயிற்சி அவசியம்.

மொத்தத்தில் பாலர், ஆரம்ப ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கப் போதிய கலாசாலைகள் அமைக்க வேண்டும். மேற்சொன்ன இரு சாராரையும் பயிற்றுவிக்க விசேட கலாசாலைகள் நிறுவுவது மிகவும் சிறந்தது.

அதில் கவனம் செலுத்தாமல், பாடசாலையை விட்டு வெளியேறும் உயர்வகுப்பு மாணவர்களுக்கு 3 வாரப் பயிற்சியுடன் நியமனம் கொடுத்துவிடும் முறை எதிர்காலச் சந்ததியினரின் கல்விக்கும், சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கும் சிதை முட்டும் செயலாகும். கல்வியாளர்களும், கல்வி அதிகாரிகளும் இது விடயத்தை அரசாங்கத்திற்கும் இடித்துரைத்துக் கருமமாற்றுதல் ஆகாதா?

பாலர் கல்வியை அரசாங்கம் ஏறெடுத்தும் பார்க்காத நிலை தொடருமானால் அதன் பாதிப்புகளை சமூகம் தான் எதிர்நோக்க நேரிடும்.

சோலில் அமெரிக்க எதிர்ப்பு உணர்வு வளருகிறது

வட,தென்கொரியாக்கள் இணைப்பு பற்றி இருபிரதமர்களும் பெப். 8இல் பேசுவர்

சோல் ஜன 17

வடகொரியப் பிரதமரும், தென்கொரிய பிரதமரும் நேரடிப் பேச்சுக்களைநடத்த சம்மதித்துள்ளனர்.

இரண்டு கொரியாக்களின் எல்லையில் உள்ள கிராமம் ஒன்றில் இப்பேச்சுக்கள் வருகிற மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

பேச்சுக்கள் நடத்த வரும்படி வடகொரியப் பிரதமர் அனுப்பிய அழைப்புக்கடிதம், எல்லை யூடாக தென்கொரியப் பிரதமரின் கையில் நேற்றுக்சேர்ப்பிக்கப்பட்டது. அழைப்பை தென்கொரியப் பிரதமர் ஏற்றுக் கொண்டார்.

இரண்டு கொரியாக்களுக்கும் இடையே 40 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிவரும் அரசியல், இராணுவ ரீதியிலான மோதல்களுக்கு இப்பேச்சுக்கள் முற்றுப்புள்ளி வைக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதனிடையில் கண்ணுக்கு அவ்வளவாகத் தெரியாத இடத்தில் அமெரிக்க இராணுவத் தலைமையகத்தை இடமாற்றம்செய்யும்படி தென்கொரிய ஜனாதிபதி ரோ-டே-ஊ கோரிக்கை விடுத்தார்.

இது அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை அளித்திருக்கிறது.

தென் கொரியாவில் வளர்ந்து வரும் அமெரிக்க எதிர்ப்பு மனப்பான்மையின் உச்சக்கட்டமாக ஜனாதிபதியின் கோரிக்கை உள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க இராணுவத்தின் தென் கொரியத் தலைமையகம் சோலில் உள்ளது. சோலின் சனத்தொகை 2 கோடியாகும்.

1945 இல் கொரியாவுக்கு ஜப்பானில்இருந்து அமெரிக்க இராணுவம் விடுதலை பெற்றுக்கொடுத்தது 35 ஆண்டுகளாக ஜப்பானின் குடியேற்ற நாடாககொரியா அதற்கு முன்னர் இருந்து வந்தது.

1950 இல் வடகொரியாவின் ஆக்கிரமிப்பில் இருந்து தென்கொரியாவை அமெரிக்கா காப்பாற்றியது.

அப்போது இருந்து சுமார் 45 ஆயிரம் அமெரிக்க துருப்புக்கள் தென் கொரியாவில்நிலைகொண்டுள்ளன. வடகொரியத் தாக்குதலைச் சமாளிக்கவே தென்கொரிய அரசு அமெரிக்க துருப்புக்களை தொடர்ந்து இருக்க அனுமதித்து வருகிறது.

இப்போது தென் கொரிய இளைஞர்கள் யங்கி சிப்பாய்களே திரும்பிப்போங்கள்என்று அமெரிக்க எதிர்ப்பு பிரசாரம்ஒன்றைஆரம்பித்து உள்ளனர்.

1980 இல் இருந்து இந்த எதிர்ப்பு உணர்வு பரவத் தொடங்கியது.

இதனைத் தணிப்பதற்காக அமெரிக்க துருப்புக்களின் ஒரு பகுதியை விலக்கிக் கொள்ளும்படி ஜனாதிபதி ரோ-டே-ஊ அமெரிக்க அதிகாரிகளைக் கேட்டுள்ளார். (எ)

குர்டிஷ் அகதிகள் பற்றி மன்னிப்புச் சபை

லண்டன் ஜன 17

துருக்கியில் உள்ள ஆயிரக் கணக்கான குர்டிஷ் அகதிகளுக்கு சர்வதேச பாதுகாப்பு வழங்கஅனுமதிக்கும்படி துருக்கி அரசை சர்வதேச மன்னிப்புச்சபை கோரியிருக்கிறது.

குர்டிஷ் அகதிகளை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக ஈராக்குக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கிடைத்த செய்திகளைத் தொடர்ந்தே சர்வதேச மன்னிப்புச் சபையின் கோரிக்கை வெளியானது

துருக்கியில் சுமார் 50 ஆயிரம் குர்டிஷ் அகதிகள் உள்ளனர்.

மனிதாபிமான ரீதியில் அவர்களுக்கு தொடர்ந்தும் தஞ்சம் அளிக்கும்படியும் சர்வதேச மன்னிப்புச்சபை துருக்கி அரசைக் கோரியுள்ளது.

பாகிஸ்தான் ஊடுருவல்; ஆப்கன் அரசு எதிர்ப்பு

காபூல் ஜன 17

பாகிஸ்தானிய ஹெலிக்கொப்டர்கள் இரண்டு ஆப்கன் வானப்பிராந்தியத்துக்குள் ஊடுருவியதாகக் காபூல் அரசு நேற்று குற்றஞ்சாட்டியது.

காபூலில் உள்ள பாகிஸ்தானிய தூதரக அதிகாரியை அழைத்து ஆப்கன் வெளியுறவு அமைச்சர் வாகில் ஆட்சேபனையைத் தெரிவித்தார். (எ)

கறுப்பு இனத் தலைவருக்கு இருபது வருட சிறைவாசம்

தேசத்துரோக வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் தலைவர்களில் ஒருவரான இஸ்மாயில் இப்ராஹிம் இஸ்மாயில் எனபவருக்கு கேப்டவுன் நீதிமன்றம் நேற்று 20 வருட சிறைத் தண்டனை விதித்தது. அதே வழக்கில் நிலக்கண்ணிவெடித் தாக்குதல் நடத்தி எட்டு வெள்ளையருக்கு காயம் விளைவித்ததற்கு குற்றவாளியாகக்காணப்பட்டவேறு இரண்டு காங்கிரஸ் உறுப்பினருக்கு முறையே 23 வருடம், 12 வருடம் சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

நீதிபதி தீர்ப்பு கூறியதும், எதிரிகள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வாழ்க என கோஷங்களை எழுப்பினர். (எ)

ஜம்முவில் கலவரம்

ஜம்முவில் காலவரையறையற்ற ஊரடங்கு மேலும் நீடிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை வெடித்த மத கலவரங்களைத் தொடர்ந்து நேற்று வரை 7 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். மத ஊர்வலம் ஒன்றின் போது இன்னொரு மதத்தினருக்குஆத்திரமூட்டும் கோஷங்கள் எழுப்பப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது. [எ)

போயிங்737 விமானங்களை பரிசோதிக்க உத்தரவு

நியூயோர்க், ஜன.17

போயிங் 737 ரக விமானங்கள் அனைத்தையும் பரிசோதனை செய்யும்படி அமெரிக்காவும் பிரிட்டனும் விமானநிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளன.

இரண்டு என்ஜின்கள் பொருத்தப்பட்ட போயிங் 737 விமானம் ஒன்று கடந்தவாரம்லண்டனில் விபத்துக்குள்ளாகியதில் 44 பேர் உயிரிழந்தமை தெரிந்ததே.

இரண்டுஎன்ஜின்களும் ஒரே சமயத்தில் பழுதடைந்ததினால் இவ்விபத்து ஏற்பட்டது.

'பாக்ஸ்' தலைவர் பிரான்ஸில் கைது

பாரிஸ், ஜன.17

பாக்ஸ்பிரிவினைவாதத் தலைவர் ஒருவரைப் பிரெஞ்சு இரகசியப் பொலீஸார் கைது செய்தனர்.

ஸ்பெயின் நாட்டில் பாக்ஸ் இன மக்களுக்கு தனிநாடு கோரி இயக்கம் ஒன்றை நடத்திவரும் இயக்கத்தின் தலைவரான இந்தநபர் கடந்த 6 வருடங்களாக பிரான்ஸின் தென்பகுதியில் தலைமறைவாகவாழ்க்கை நடத்தி வந்தாராம்.

இடி அமினின் திரிசங்கு நிலை!

ரியாத் ஜன 17

உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரி இடி அமினைத் திருப்பி எடுக்க சவூதி அரேபியா அரசு மறுத்து விட்டது.

அண்மையில் ஸயாரே சென்று, பின்னர் அங்கிருந்து உகண்டாவுக்கு செல்ல எத்தனித்த போது, இடி அமினை ஸயாரே அரசு கைசெய்து சவூதிக்குத் திருப்பி அனுப்பியது.

1979 இல்இடிஅமினின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதன் பின்னர் அவர் சவூதியில் தஞ்சமடைந்தார். (எ)

இப்படி ஏற்படுவது 10 லட்சத்தில் ஒன்றுதான் என்று விமானத்துறை நிபுணர்கள் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து அமெரிக்கா தனது நாட்டில் உள்ள 300 போயிங் விமானங்களையும் பிரிட்டன் தனது நாட்டில் உள்ள 40போயிங் விமானங்களையும் பரிசோதனை செய்யவுள்ளன. (எ)

வெளி உலகில்

ஆர்ப்பாட்டம்

கிழக்குஜேர்மனியிலும் ஜனநாயக உரிமைகள் கோரி நேற்று 200க்கும் அதிகமானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பத்திரிகைச்சுதந்திரம், கூட்டம்நடத்தும்உரிமை, மற்றும் ஜனநாயக சுதந்திரங்களை வழங்கவேண்டும் என்று அவர்கள் கோஷமிட்டனர்

பொலீஸார் தடியடி செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

1919 இல் கொல்லப்பட்ட கம்யூனிஸ்தலைவர் ஒருவரின் நினைவாக இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. (எ)

போதை வஸ்து

சண்டிகார், ஜன. 17

சுமார் 400 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்துபஞ்சாபில்நேற்று கைப்பற்றப்பட்டது. (எ)

பணவீக்கம்

பிரேஸிலியா, ஜன 17

பிரேஸிலில் அரசு கடும் சிக்கனப் பொருளாதாரத் திட்டம் ஒன்றை நேற்று அறிவித்தது.

பணவீக்கம் ஆயிரம் சதவீதத்தினால் அதிகரித்துஉள்ளதாகஅறிவிக்கப்பட்டது (எ

இளம் எழுத்தாளர்களை உரம் இட்டுவளர்த்தவர்

கைலாசபதி நினைவேடு வெளியீட்டில் உரை

கொக்குவில், ஜன. 18

இலங்கைப் பத்திரிகைத் துறையில் கைலாசபதியின் செயற்பாடு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும்,

அவர்ஓர் அசாதாரண தமிழறிஞன். அவர் தனிமரம் அல்ல இலக்கியத் தோப்பு.

இளம் எழுத்தாளர்களை உரமிட்டு வளர்த்த உன்னத ஆசிரியன்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற 'கைலாஸ்' என்னும் கைலாசபதி நினைவேடு வெளியீட்டில் சிறப்புரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனதுஉரையில் மேலும் கூறியதாவது

கைலாசபதி காரணமாகவளர்ந்த மாணவர் பலருண்டு

பெறுமதிவாய்ந்த புத்தகங்களையும் தாராளமனப்பான்மையுடன் கொடுத்துதவும் பண்புடையவர்.

எதனையும் உடனே இனங்காணும் பண்பு மிக்கவர்.

இலக்கியப் பாரம்பரிய மீட்டெடுப்பில் இவரின் பங்குகுறிப்பிடத்தக்கது.

ஆசிரியராக இருந்து இவர் உருவாக்கிய மாணவ பரம்பரையிலும் சிறந்த இலக்கிய விமர்சகர்களைக் காணலாம். கைலாசபதியின் விமர்சனம் கருத்துநிலை விமர்சனமாக இருந்தது.

புராதன தமிழிலக்கியம்பற்றி இருந்துவந்த கருத்தை மாற்றியமைத்தார்.

சங்ககால இலக்கியத்துக்கு உலகப்பொதுத் தன்மையை எடுத்துக் காட்டினார்.

தமிழிலக்கிய உலகின் தலைசிறந்தோர் பெயர் வரிசையில் இவரின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும்

இப்படி அவர் கூறினார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில்தலைமைவகித்து உரையாற்றிய முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபரும் கைலாசபதியின் மாணாக்கர்களில் ஒருவருமான திரு. க. சண்முகலிங்கம் தமது உரையில் கூறியதாவது:

'நவீன தமிழ் இலக்கிய உலகில் புகழ்பெற்ற விமர்சகராகவும், ஆய்வாளராகவும், பல நூல்களையும், ஆய்வுக்கட்டுரைகளையும் வெளியிட்ட புலமையாளராகவும் விளங்கினார்' எனக் கூறினார்.

கலாநிதி.மௌனகுரு நினைவு ஏட்டை அறிமுகஞ்செய்து உரை நிகழ்த்தினார்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் [illegible] வெளியீட்டு வைத்தார்.

முதல் பிரதியை [illegible] கலாஞ்சென்ற கைலாசபதியின் தந்தை திருகனகசபாபதியும் இரண்டாவது பிரதியை கைலாசபதியின் மகளும், பல்கலைக்கழக மாணவியுமான செல்வி சுமங்கலா பெற்றுக்கொண்டார். [ச-69]

கட்டட பற்றாக்குறை

நீர்வேலி ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் கட்டடப் பற்றாக்குறை நிலவுவதால் அங்குகல்வி பயிலும் மாணவர்கள் அருகே உள்ள கோவில் மண்டபத்தில் தமது கல்வியை கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

இப்பாடசாலைக்கு என இரண்டுமாடிக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டபோதிலும் இன்னும் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. (ச-72)

ஆதீனத்தில் கந்தபுராண படனம்

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கடந்த தைப்பொங்கல் தினம் முதலாகக் கந்தபுராண படனம் நடைபெற்று வருகின்றது.

தினமும் பிற்பகல் 2 30 மணிக்கு ஆரம்பமாகும் கந்தபுராண படனம் [illegible] மணிவரை நிகழும். (ஒ)

ஆலய செய்திகளில்

கும்பாபிஷேகம்

கோப்பாய், ஜன 18

வடகோப்பாய் துர்க்கை அம்மன் கோவிலில் இன்று புதன்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ச-72)

இன்று கேதீஸ்வரத்தில் மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம் ஜன 18

திருக்கேதீஸ்வரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள துவஸ்டாமண்டபத்தின் திறப்புவிழா இன்று நடைபெறுகின்றது.

இம்மண்டபம் விஸ்வகுல மக்களின் அன்னதான மண்டபமாக இயங்குவதுடன் வருடந்தோறும் விஸ்வகுல மக்களால் கொண்டாடப்படும் திருக்கேதீஸ்வரதை அமாவாசைதீர்த்த விழாவைச் சிறப்பித்து இயங்குவதாயும் அமையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

சிவாசார்ய குரு பட்டாபிஷேகம்

யாழ்ப்பாணம் ஜன 18

உடுவில் ஸ்ரீமீனாட்சி அம்மை சமேத ஸ்ரீசோமசுந்தர ஈஸ்வரர் தேவஸ்தானத்தில் இன்று காலை 9.00மணி அளவில்சிவஸ்ரீ சிவபாலகப்பிரமணிய சர்மாவுக்கு சிவாசார்ய குரு பட்டாபிஷேகம் நடத்தப்படுகிறது. (ஒ)

வற்றாப்பளை கண்ணகி ஆலய கும்பாபிஷேகம் இம் மாதம் 25ஆம்திகதி

யாழ்ப்பாணம். ஜன. 18

சரித்திரப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் இம் மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை சிறப்பாக நடைபெற உள்ளது.

பெரும் பணச்செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டுப் புதிய சிற்ப விக்கிரக வேலைப்பாடுகளுடன் விளங்கும் இவ் வாலயத்தின் கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக இம்மாதம் 22ஆம் திகதி தொடக்கம் பிரதிஷ்டா கருமம் கிரிகைகள் ஆரம்பமாகவுள்ளன.

இவற்றைத் தொடர்ந்து, பிரதிஷ்டாகுரு, முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ தா.சர்வேஸ்வரக் குருக்கள் முதன்மையில் அம்பாளின் கும்பாபிஷேகம் நடைபெறும். அவற்றுக்கான சகல ஏற்பாடுகளையும் பிரஸ்தாபஆலய பரிபாலனசபை நிர்வாகம் மேற்கொண்டுவருகின்றது.

இவ்வைபவங்களுக்குப் பெரும் எண்ணிக்கையில் அடியார்கள் வருகை தருவார்களென எதிர்பார்க்கப்படுவதால் இத்தினங்களில் விசேட போக்குவரத்து, பாதுகாப்புகளுதாரவசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் மேற்கொண்டுள்ளார்.

வன்னியில் முதன்முதலாக இராசேந்திரபுரம் அமையும் சிறப்பைப் பெற்றுள்ளஇவ் ஆலயம் தலத்தின் இராசகோபுரத்திருப்பணிகளும் துரிதகதியில் நடைபெற்று வருவது குறிப்பிடக்கூடியதாகும் (அ)

மானிப்பாய் மகளிர் கல்லூரி வெள்ளிவிழா

மானிப்பாய், ஜன 18

மானிப்பாய் மகளிர் கல்லூரி வெள்ளிவிழா பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில்கொண்டாடப்படவுள்ளது

வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் நடைபெற உள்ளன. வெள்ளிவிழாவை முன்னிட்டு வெள்ளிவிழாக் கட்டடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. [illegible] சுந்தரேசன் தலைமையில் வெள்ளிவிழாக் கட்டடத்துக்கான அடிக்கல் நாடும் விழா அண்மையில் நடைபெற்றது. (ஒ-க-90)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• ரெகடிவ்[PROCESSING]செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள

உதயன்

18 01 . 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படங்களை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

யாழ். ஆஸ்பத்திரிக்கு 200 உள்ளக தொலைபேசிகள்

யாழ்ப்பாணம் ஜன 18
யாழ். ஆஸ்பத்திரியில் 200 இணைப்புகள் கொண்டஉள்ளகதொலைபேசி வசதி ஏற்படுத்தப்படவிருக்கிறது.

இதனால் தற்பொழுது இணைப்புகள் இல்லாத பிரிவுகளுக்கும் தொலைபேசி வசதி கிடைக்கும்.

இதேவேளை வைத்திய நிபுணர்கள் சத்திர சிகிச்சை நிபுணர்கள் ஆகியோரது இல்லங்களுக்கும் ஆஸ்பத்திரி 'கவிற்ச் போர்ட்' ஊடாக தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும்.

இதன் மூலம் வைத்திய நிபுணர்கள் வீட்டில் இருந்து கொண்டே நோயாளிகளின் நிலைமைகள் குறித்து அறிந்து கொள்ள முடியும்.

சித்திரை புதுவருடம் முதல் உள்ளக தொலைபேசிச் சேவை இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவரின் திடீர் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜன 18
உயிரிழந்த மாணவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கண்டி, வெவிமட, பதுளை மற்றும் மத்துகம பகுதிகளுள்ள ஏழு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் திடீர் பகிஷ்கரிப்பு இயக்கம் ஒன்றை நடத்தினர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இப் பகிஷ்கரிப்பின் போது அசம்பாவிதங்கள் எதுவும் இடம் பெறவில்லை. (ஒ-எ)

பாடசாலைகள் இயங்குவதை தடுப்போர் கைதாவர்

அரசாங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன 18
பாடசாலைகள் இயங்குவதைத் தடைசெய்யும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இதற்காக பாடசாலைகளுக்கு அருகில் பொலீஸார் சாதாரண உடையில் நடமாடுவர்என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவரொட்டிகள் ஒட்டுதல் மாணவரை சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது —ஆகியவற்றில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

வேங்கடேஸ் கோழும்பில்

கொழும்பு, ஜன 18
இந்திய வெளியுறவு அமைச்சின் முன்னாள் செயலாளரான திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் கொழும்பு வந்தார்.

அவர் இன்று புதன் வரை கொழும்பில் தங்கியிருப்பார். (உ-எ)

சன்மானம் ஒரு லட்சம்

கொழும்பு, ஜன 18
கட்டுப்பெத்த இலங்கை வங்கிக் கிளையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் பற்றிய தகவல் தருவோருக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-எ)

45 ஆம் நாள் நினைவஞ்சலி

திரு. சபாபதி சுப்பிரமணியம்

(உடுவில் கிழக்கு)
(ஸ்ரீ முருகன் பாம் உரிமையாளர் மருதனார் மடம்)

தோற்றம்:- 9.10. 1919
மறைவு:- 05 12. 1988

திதி.- 18. 01. 1989

பாசத்துடனும் நேசத்துடனும் எங்களை எல்லாம் வளர்த்து சிறப்பித்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அஞ்சலி செய்பவர்கள்;
சகோதரிகள், உறவினர்கள்,
நண்பர்கள்.

(9009)

மரண அறிவித்தல்கள்

திருமதி செல்லத்துரை செல்லம்மா

மாவிட்டபுரத்தினை பிறப்பிடமாகக் கொண்டவரும். காலஞ்சென்ற ம. செல்லத்துரை (Retd Tea maker) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி இராசமணி சண்முகத்தின் மாமியாருமாகிய செல்லம்மா 17-01-89 இல் காலமானார். இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ச. நில்லைநாதன்
அச்சுவேலி.

(9185)

திருமதி நந்தினி வரதராஜன்

வல்வெட்டித்துறை நறுவிலடியைச் சேர்ந்த திருமதி நந்தினி வரதராஜன் (ஆசிரியை. திருக்குடும்ப கன்னியர் மடம். கொழும்பு) அகால மரணமானார். இவர் யோ. வரதராஜனின் (பொறியியலாளர், சவூதி அரேபியா) மனைவியும், பொ. கந்தசாமி (Finance Director விவசாய அமைச்சு) நவரத்தினம் ஆகியோரின் மகளும், திரு. திருமதி யோகராஜ அவர்களின் மருமகளும், பொன்னுச்சாமி (மருத்துவபீடம்.கொழும்பு) தயாநிதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பு-5, இல: 215 B1/2 'அன்ரசன் தொடர்மாடி' இல்லத்தில் 18-01-89 இன்று புதன்கிழமை பி. ப5 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[9000]
தகவல்:
பொ. பாலவடிவேல்.

மாணவர் முகாம் மூடப்பட்டது

நெல்லியடி-மாலுசந்தி விதியின் மையத்தில் தோட்டவெளிக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருந்த இந்திய அமைதிப் படை முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டிருக்கிறது. [உ-70]

முகவர் தபால் நிலையம்

யாழ்ப்பாணம், ஜன 18
யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் முதல் முகவர் தபால் நிலையம் ஒன்று இயங்கவுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை வட பிராந்திய தபால் அத்தியட்சகர் அலுவலகம் வழங்கும் என்று தெரியவருகிறது. (ஒ- 10)

சாரதி சுட்டுக்கொலை

கரவெட்டி, ஜன 18
கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் கரவெட்டி இரும்பு மதவடிக்கண்மையில் பஸ்சாரதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

'பினேன்' என அழைக்கப்படும் இவர் நவிண்டிலைச் சேர்ந்தவர்எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-70)

தேடுதல்

கீரிமலைப் பகுதியில் நேற்று மாலை இந்திய அமைதிப்படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். (ஒ-10)

பிராந்திய கல்வி பணிமனை இன்று திறந்து வைப்பு

தாளையடி, ஜன. 18
கிளிநொச்சி பிராந்திய கல்வி அலுவலகம் இன்று புதன்கிழமை வைபவரீதியாக புதிய கட்டடம் ஒன்றில் திறந்து வைக்கப்படும்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் பல லட்சம் ரூபா செலவில்அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில், வவுனியா கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் புதிய அலுவலகத்தைத் திறந்து வைப்பார்

இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி, மேலதிக அரசாங்க அதிபர்கள் திரு. எஸ். அமிர்தலிங்கம் திரு கே. குணராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைகளும் இன்று திறந்து வைக்கப்படும். [ஒ-144]

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர்

யாழ் மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின், உதவி அரச அதிபராக, நெடுந்தீவுஉதவிஅரசாங்கஅதிபராகஇருந்த திரு தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் நியமிக்கப் பட்டுள்ளார். (ஒ)

எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று பெரும் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 18
எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்றுக் காலை பெரும் பதற்றம் நிலவியது.

இப்பகுதியில் இரண்டு பெரிய குண்டுச் சத்தங்களும், தொடர் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கண்ணிவெடிச் சம்பவங்களே பெரிய சத்தங்களுக்கான காரணம் என்று சொல்லப்பட்டது

உயிரிழப்பு பற்றிய விவரம் எதுவும் தெரியவரவில்லை. [ஒ]

ரயில்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சிதறிக் கிடக்கக் காணப்பட்டன.

பஸ், ரயிலுடன்மோதுவதற்கு முன்னர் பஸ்ஸின் சாரதி பஸ்ஸை விட்டுப் பாய்ந்து உயிர் தப்பி விட்டார்.

ரயிலுடன் மோதிய போது பஸ்ஸில் 80 மாணவர்கள் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்தில் 30 பேரின் சடலங்களை பொலீஸார் கண்டெடுத்தனர்.

மேலும் 22 பேர்மருத்துவமனையில் உயிரிழந்தனர்.

சாயமடைந்தவர்களில் ரயில் பயணிகளும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ-எ)

தீக்கம் பகுதி சுற்றிவளைப்பு

வல்வெட்டித்துறை, ஜன, 18
தீக்கம் பகுதி நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை சுற்றிவளைக்கப்பட்டது. தேடுதலும் இடம் பெற்றது. இடை இடையே அப்பகுதியிலிருந்து வேட்டுச் சத்தங்களும்கேட்டன. (உ-160)

திருமலை நகரசபை இடம்மாற்றம்

திருகோணமலை, ஜன.18
திருகோணமலை நகரசபை அலுவலகம் டொக்யாட் வீதியில் உள்ள ஏ. பி. சி. டி.ஹோட்டல் கட்டடத்திற்கு மாற்றப்படவிருப்பதாகத் தெரிகிறது.

மேற்படி கட்டடத்தில் நடைபெற்று வரும் திருத்த வேலைகள் முடிவுற்றதும் நகரசபை அலுவலகம் அங்கு இடமாறும்.

இதனையடுத்து திருமலை நகரசபையின் தற்போதைய அலுவலகக் கட்டடத்தின் கீழ்மாடியில் இயங்கிவரும் வடக்கு-கிழக்கு மாகாண சபைச் செயலகத்திற்கு முழுக் கட்டடமும் ஒப்படைக்கப்படும் -தகவல் அறிந்த வட்டாரங்கள் இச்செய்தியைத் தெரிவித்தன. (உ- 150)

ஊழியருக்கு சம்பள நிலுவை

1988 ஆம் ஆண்டுக்குரிய சம்பள நிலுவைப் பணமான எட்டு லட்சம் ரூபாவை பணிஅபிவிருத்திச்சபை 135 ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது

இச்சபையின் 55 தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். (ஒ)

சீன விஜயம்

பீகிங், ஜன 17
பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ வருகிற ஜூலை மாதம் சீனாவுக்கு விஜயம் செய்வார். திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது. (எ)

ஜே.வி.பி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
குள் நுழைய இருந்த சமயத்தில் ஊர்வலத்தை பொலீஸார் தடுத்து நிறுத்தினர்.

ஊர்வலத்தில் வந்தவர்கள் கலைந்துபோக மறுக்கவே பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். அதன் பின்னரே ஊர்வலம் கலைந்தது. (உ-எ)

மொறட்டுவையில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கைக்குண்டு ஒன்றும் இயந்திரத் துப்பாக்கி ஒன்றும் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டன. என்றும் கூறப்பட்டது. (ஒ-ஐ-எ)

வடக்கில்....

(1ம் பக்கத்தொடர்ச்சி)
படும் என்று வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

தற்போது பணம் செலுத்திவருபவர்களின் நகைகளை அடுத்து வரும் வாரங்களில் வழங்கவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-10)

மரண அறிவித்தல்கள்

திருமதி கந்தையா பாக்கியம்

(சிறுப்பிட்டி)

சிறுப்பிட்டி வடக்கு அமரர் அதிபர். சி. நா. சுந்தையா அவர்களின் அன்பு மனைவி பாக்கியம் காலமாகிவிட்டார். அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவரும் இந்து சாதனப் பத்திரிகையின் முன்னாள் பத்திராதிபருமான மு. கார்த்திகேசு அவர்களின் அன்பு மகளும், ஸ்ரீபாலசரஸ்வதி (கனடா), சிவனேஸ்வரி, தங்கேஸ்வரி, வைத்தியநாதன் (கிராம சேவகர், புத்தூர் கிழக்கு), ஸ்ரீஸ்கந்தராசா (பயிர்ச்செய்கை உத்தியோகத்தர், சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி குமாரசாமி செல்லம்மா அவர்களின் அன்புச் சகோதரியும், ஆ. வேலுப்பிள்ளை (கனடா). காலஞ்சென்ற சோ. ரவீந்திரநாத் (கணக்காளர்), த. நமசிவாயம் (புகைப்படக் கலைஞர்), ச. தங்கராசா (அதிபர், கோப்பாய் மகாவித்தியாலயம்), த. பரஞ்சோதி, பாலராணி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீசுந்தர் (கனடா), ஸ்ரீசுயந்தி (யாழ் மருத்துவபீட மாணவி), ஸ்ரீசாந்தி (கனடா), ஸ்ரீசங்கர் (கனடா). ஸ்ரீசேகர் (கனடா). நடராசா (கணக்காளர் பாதுகாப்பு அமைச்சு, சவூதி அரேபியா). சௌந்தரநாயகம் (சென்னைப் பல்கலைக்கழக மாணவன்). மகாதேவன் (சென்னைப் பல்கலைக்கழக மாணவன்) அமுதம். சொர்ணலட்சுமி. நிரோஷினி, நிரஞ்சன், நிசாந்தன், நிதர்சன், கீர்த்திகா, அஞ்சனன், கரிகாலன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1989-01-17 ஆந் திகதி சிறுப்பிட்டிவடக்கு 'ஸ்ரீயகத்தில்' நடைபெற்றுத் தகனக்கிரியைகள் சிறுப்பிட்டி வடக்கு கிந்திசிட்டி மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
க வைத்தியநாதன்
க. ஸ்ரீஸ்கந்தராசா (மக்கள்)
'ஸ்ரீயகம்'
சிறுப்பிட்டி வடக்கு.
நீர்வேலி. [9001]

திரு. இராசதுரை லிங்கரத்தினம்

திரு இராசதுரை லிங்கரத்தினம் சவூதியில் காலமானார். இவர் யாழ் சின்னத்தரை & பிரதர் முன்னாள் ஊழியரும் இணுவில் கிழக்கைச் சேர்ந்த இராசதுரை தம்பதிகளின் மூத்த புதல்வருமாவார். அன்னார் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் சுகந்திவி. சாந்திவி, யாழினி, சைவிவி, பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, ராசாத்தி, சிவலோகநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும். கந்தரோடை செல்லத்துரை தம்மதிகளின் மருமகனும் ஜெயகௌரியின் அருமை அத்தானுமாவார். ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி.
கந்தையா உபாத்தியாயர் வீதி,
கந்தரோடை. 9183)

சின்னத்தம்பி கந்தப்பு

(ஈவினை)

சின்னத்தம்பி கந்தப்பு 17-1-89 இல் காலமானார். இவர் உத்தமிப்பிள்ளையின் அன்புக் கணவனும் திருமதி பு. நாகம்மா, நாகேஸ்வரன், முருகையா ஆகியோரின் அன்புத் தந்தையும், புகழேந்திரன், தேவராணி, சோதிலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபா, யனதீபா, பிரசாத், ஜினிதா, சாலினி, பாலமுரளி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பி.ப 1 30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஈவினை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. புவனேந்திரன்
(9010)

சென் சாள்ஸ்

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற வண. பிதா B. அல்பிரட் அவர்களின் சகோதரியும், யாழ் திருக்குடும்பக் கன்னியர் சபைச் சகோதரியுமாகிய சென் சாலிஸ் அவர்கள் காலமாகிவிட்டார்கள். அடக்கச் சடங்குகள் 18-1-1989 மாலை 3-00 மணிக்கு இடம் பெறும் என்பதை அறியத்தருகிறோம்.

மாகாணத் தலைவி
தி. கு. மாகாண இல்லம்
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (8995)

A/L 89
DAY CLASSES
(Mon to Fri)
B. M. C. முன்னேன்
யாழ்ப்பாணம்

PHYSICS
R. சத்தியசீலன்
8.30 am ஒட்டமின்னியல்
9.30 a.m கலோரி அளவியல்
1 30 p.m கொளமேற் பரப்பில் ஒளி முறிபு
(நடைபெறுகிறது)

ZOOLOGY
R. ஈஸ்வரதாசன்
10.30 a.m வன்கூடு (மீட்டல்)
11. 30 a.m முளையவியல் ஆரம்பம் 23- 01- 89
(C/1133)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிதாயனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலுள்ள அச்சகத்தில் 18- 01- 1989 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது: Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Wednesday 18th January 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org